# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2116/44 - 2019 මාර්තු මස 27 වැනි බදාදා - 2019.03.27

*2116/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/ 78* (xv).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, ஊவா வெல்லஸ்ச பல்கலைக்கழகத்தை தாபிக்கின்ற சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதிய 2079/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிய 1395/ 15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன் :-*

(1) ஓராம் நிரலில் காணப்படும் "அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்" என்னும் விடயத்தினையும் அதன் II ஆம் நிரலில் காணப்படும் அதனது நேரொத்த பதிவுகள் "2" மற்றும் "3" இனையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "1. பிரயோக விஞ்ஞான பீடம் | 1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை |
| | 2. கணினி அறிவியல் மற்றும் தகவலியல் துறை ;" |

(2) அதன் நிரல் I இல் "2. முகாமைத்துவ பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததான நிரல் II இல் காணப்படும் பதிவு "3" இனை உடனடுத்தும் பின்வரும் புதிய பதிவினை சேர்த்துக்கொள்வதன் மூலமும் :-

"4. சுற்றுலா கற்கைகள் துறை.".

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, மாச்சு 25.

04-345

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.